முதல் இடைப்பருவத்தேர்வு - 2024 தஞ்சாவூர் மாவட்டம்

9 ஆம் வகுப்பு - தமிழ்

விடைக்குறிப்பு

1) இ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2) அ. சிற்றிலக்கியம்

3) இ. கீழே

4) ஈ. வளம்

5) அ. தன்வினை

6) இ. சேக்கிழார்

7) இ. வைரமுத்து

8) ஈ.புறநானூறு

9) அ. குடபுலவியனார்

10) ஈ. எண்ணும்மை

11) இரண்டு கண்களைப் போல இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள்வகை கண்ணி.

12) நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

13). ஆறு, குளம், கிணறு, ஏரி, அணை, அகழி

14). வேற்றுமைத் தொடர், விளித்தொடர்

15) உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை

16) அ. நீர் மேலாண்மை ஆ. பேரகராதி

17) அ- மெதுவாக ஆ- வேகமாக

18) அ- முதுமையில் இன்பம்

ஆ. சிறப்பு

www.Padasalai.Net

19) அ. பாய், மரம், கப்பல்,

ஆ. எட்டு, கால், பூச்சி

20) அ. சர் ஆர்தர் காட்டன் கல்லணையில் கட்டுமான உத்தி கொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

ஆ. மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்திணை புரிகின்றது.

21) உலகில் மூத்த மொழி. கால மாற்றத்தால் அழியாத மொழி.

அறிவியல் வளர்ச்சிக்கேற்ப மாறிவருகிறது. கணினியிலும் தமிழ் வாழ்கிறது. இவ்வாறு கால மாற்றத்திலும் மாறாமல் புதுப்பித்துக்கொள்ளும் மொழி.

22). நீர்நிலைகளைப் பெருக்கச் செய்தல் வேண்டும் - உணவைத் தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்- உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும் - நீரையும் நிலத்தையும் ஒன்று சேர்த்தவர் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவர். அவர்களை ஆதரிப்பாயாக.

23) பறவைகள் வந்து ஓய்வெடுத்தன. சிறுவர்கள் வந்து விளையாடினர் - பலர் நிழல் தேடி வந்து அமர்ந்தனர் - இப்போது எதுவும் இன்றி பட்டமரமாய் இருப்பதாக வருத்துகின்றது.

24) தன்வினை :

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை. எ- கா பந்து உருண்டது.

பிறவினை :

எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அதுபிறவினை . எ- கா பந்தை உருட்டவைத்தான்

25) மழை நீரை சேமிக்க வழிவகை செய்ய வேண்டும்.

தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். குடிநீரை வீணாக்கக் கூடாது. நீரை இன்றியமையாமையை அறிவிக்கவேண்டும் . ஆறு, குளங்களை மாசு படுத்தக்கூடாது.

26) அ. காவிரிநீர் புதிய பூக்களை அடித்து வருகின்றது. அப்பூவிலுள்ள தேனைக் குடிக்க வரும் வண்டுகள் ஆரவாரம் செய்கின்றன. காவிரி நீர் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.

www.Padasalai.Net

காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன. சோலைகள் எங்கும் செடிகளின் கிளைகளில் மலர் அரும்புகள் உள்ளன. பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் உள்ளன. கரைகளில் இளைய அன்னங்கள் உலவுகின்றன.

அன்னங்கள் விளையாடும் நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால் அங்குள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகிலுள்ள பாக்கு மரத்தில் பாயும். இக்காட்சி வானவில்லைப் போன்று விளங்கும்.

ஆ) அன்புள்ள நண்பா,

நலம் நலமறிய ஆவல்.நீ பிறந்த நாள் பரிசாக அனுப்பிய கால் முளைத்த கதைகள் எனும் நூல் கிடைத்தது. முப்பது பழங்குடியினர் சொன்ன கதைகளின் தொகுப்பே அந்நூல். கொசு ஏன் கடிக்கிறது ? பூனையை எலி ஏன் துறத்துகிறது ? போன்ற விடைதெரியாத கேள்விகளுக்கு விடை இக்கதையில் உள்ளது. இதுபோன்ற மற்றுமோர் நூலை உனக்கு அனுப்புகிறேன்.

27) அ. தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்

விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

ஆ. காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு

மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை

கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல்அன்ன

நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி

கும்பகோணம் . செல் -9443740120.

www.Padasalai.Net